## மெட்ரோ ரெயில் நிலையங்களில் வாகனங்களை நிறுத்த

# பயண அட்டை மூலமாக கட்டணம் செலுத்த ஏற்பாடு

சென்னை, ஜூலை.26-
சென்னை மெட்ரோ ரெயில் நிர்வாகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டிருப்பதாவது:-

சென்னை மெட்ரோ ரெயில் பயணிகளின் போக்குவரத்தை எளிதாக்க, மெட்ரோ ரெயில் பயண அட்டை மூலம் வாகன நிறுத்தும் கட்டணங்களை செலுத்தும் ஏற்பாட்டை சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனம் அறிமுகப்படுத்தியுள்ளது. அனைத்து மெட்ரோ ரெயில் நிலையங்களிலும் இந்த நடைமுறை நடப்பு ஜூலை மாதத்தில் இருந்து சோதனை அடிப்படையில் செயல்படுத்தப்பட்டது. இந்தநிலையில் வருகிற 1-ந்தேதி(வியாழக்கிழமை) முதல் அனைத்து மெட்ரோ ரெயில் நிலையங்களிலும் உள்ள வாகன நிறுத்தத்தில், வாகனங்களை நிறுத்துவதற்கான கட்டணத்தை மெட்ரோ ரெயில் பயண அட்டை மூலம் மட்டுமே செலுத்த வேண்டும்.

மெட்ரோ ரெயில் பயண அட்டை இல்லாத பயணிகள், தங்களது வாகனத்தை நிறுத்த மெட்ரோ ரெயில் நிலையங்களில் உள்ள வாடிக்கையாளர் சேவை மையம் மூலமாகவோ அல்லது டிக்கெட் கவுண்ட்டர்கள் மூலமாகவோ பயண அட்டையை வாங்கி அதன் மூலம் மட்டுமே வாகனங்களை நிறுத்த வேண்டும்.

இவ்வாறு அந்த செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.